DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC–153/2024

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. செல்லமுத்து | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present.)

23.03.2026 – 01.20 PM

<u>முதல் விசாரணை:–</u>

1. நான் ஆப்பனூர் அரியநாதபுரம் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மாமனார் ஆவார்.

2. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் எனது வீட்டின் வெளியே இரவு வேலையில் நான் நின்று கொண்டிருந்த போது சிலர் எனது வீட்டின் முன்பு சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் அருகே சென்று பார்த்தபோது என்னை யாரோ கீழே தள்ளிவிட்டார்கள். என்னை தள்ளிவிட்டவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. நான் இந்த சம்பவம் குறித்து கடலாடி காவல்நிலையத்தில் தெரிவித்த போது எழுதப்படாத வெள்ளைப்பேப்பரில் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>பிறழ் சாட்சி:–</u>

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

கடந்த 27.06.2024ம் தேதி இரவு 09.00 மணியளவில் ஆஜர் எதிரியான எனது மாமனார் அருவாளை எடுத்து வந்து என்னை அசிங்கமாக பேசி பின்

தலையில் வெட்டி ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றால்சரியல்ல. எங்கள் ஊரைச் சேர்ந்த ஐய்யப்பன், முருகவேல், எனது தம்பி முத்துராமலிங்கம் ஆகியோர் எதிரியை விலக்கிவிட்ட போது ஆஜர் எதிரி என்னை பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல.

எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு கடலாடி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்த போது கடலாடி போலீசாரிடம் ஆஜர் எதிரி மீது புகார் வாக்குமூலம் கொடுத்து விட்டு தற்போது எதிரி எனது மாமனார் என்பதால் அவருடன் சமதாதானம் செய்து கொண்டு எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.23 18:31:39 +0000